TNTP130008042023

Presented on : 18-02-2023
Registered on : 23-02-2023
Decided on : 09-12-2024
Duration : 1 years, 9 months, 19 days

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், துறையூர்.
முன்னிலை – திருமதி.அ.நர்மதாராணி, பி.எஸ்சி., எம்.எல்.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், துறையூர்
2024 ஆம் ஆண்டு டிசம்பா மாதம் 09 ஆம் நாள் திங்கட்கிழமை
குரோதி வருடம் கார்த்திகை மாதம் 24, 2055 திருவள்ளுவர் ஆண்டு
ஆண்டு பட்டிகை வழக்கு எண்.57/2023

| | |
|---|---|
| குற்றமுறையிடுபவர் | மாநில அரசு சார்பில்<br>காவல் ஆய்வாளர்,<br>உப்புலியபுரம் காவல் நிலையம்,<br>குற்ற எண்.115/2022 |
| அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் | திருமதி.பெரிய மறத்தி, B.A.,L.L.M., |
| எதிரிகள் | 1. பரத் (செங்காட்டு பரத், (வயது 24),<br>த/பெ.கதிரேசன்,<br>வீரபுறம் தெரு, செங்காட்டுப்பட்டி,<br>துறையூர் தாலுக்கா,<br>திருச்சி மாவட்டம்.<br><br>2. சரணீஷ், (வயது 22),<br>த/பெ.ராஜலிங்கம்,<br>38, விநாயகர் தெரு,<br>துறையூர் தாலுக்கா,<br>திருச்சி மாவட்டம்.<br><br>3. மூர்த்தி, (வயது 36),<br>த/பெ.ராமு,<br>53/5, செங்குளம் காலனி,<br>பாலக்கரை,<br>திருச்சி மாவட்டம். |

| | |
|---|---|
| | 4. கார்த்திக் (எ) போண்டா கார்த்திக்,<br>(வயது 20),<br>த/பெ.முருகேசன்,<br>விநாயகர் தெரு,<br>துறையூர் தாலுக்கா,<br>திருச்சி மாவட்டம். |
| எதிரி தரப்பு வழக்கறிஞர் | திரு.M.விக்னேஷ், B.A., B.L., |
| சம்பவம் நடந்த நாள் | 07.05.2022 |
| முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நாள் | 07.05.2022 |
| இறுதியறிக்கை தாக்கல் செய்த நாள் | 18.02.2023 |
| விசாரணை ஆரம்ப நாள் | 14.11.2024 |
| குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | 14.11.2024 |
| தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்ட நாள் | 07.12.2024 |
| தீர்ப்பு நாள் | 09.12.2024 |

இவ்வழக்கானது 23.02.2023 அன்று ஆண்டுபட்டிகை வழக்கு எண். 57/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பு கடந்த 02.12.2024 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது, அரசு தரப்பில் திருமதி.S.பெரிய மறத்தி அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.M.விக்னேஷ், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

இந்த வழக்கில் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 454, 380-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1) குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் –

கடந்த 07.05.2022 ம் தேதி காலையில் புகார்தாரர் தனது வீட்டை பூட்டி விட்டு வயலுக்கு சென்றதாகவும், அன்று பகல் சுமார் 02.00 மணியளவில்

முதலாவது எதிரி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு திருடவேண்டும் என்ற நோக்கத்தில் புகார்தாரரின் வீட்டின் பூட்டை உடைத்து பதுங்கி வீட்டின் உள்ளே சென்று பெட்ரூமில் இருந்த பீரோவை திறந்து அதில் இருந்த 7 பவுன் இரட்டைவட தங்க செயின், 5 பவுன் நெக்லஸ் மற்றும் 3 பவுன் 6 ஜோடி தங்க தோடுகள் என மொத்தம் சுமார் 15 பவுன் தங்க நகைகளையும், பணம் ரூ.1,10,000/-ஐ திருடிச்சென்ற குற்றத்திற்காக எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 454, 380 ன் கீழ் உப்புலியபுரம் காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிரிகள் மீது முகாந்திர வழக்கு இருந்ததால், இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் இதச பிரிவுகள் 454, 380 ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கின் எதிரிகள் ஆஜரானதும், அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207 ன் கீழ் இலவசமாக எதிரிகளுக்கு வழங்கப்பட்டது.

3. எதிரிகள் மீண்டும் முன்னிலையானதும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரிகள் மீது குற்றம் செய்ததற்கான முகாந்தரம் தென் பட்ட காரணத்தினால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 454, 380 ன் கீழ் குற்றச் சாட்டுக்கள் வனைந்து விளக்கி வினவப்பட்டது. எதிரிகள் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4. அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப் பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்பட வில்லை.

**<u>5. அரசுத் தரப்பு சாட்சிகளில் இருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்–</u>**

i) அ.சா.1 தமிழரசன் தனது சாட்சியத்தில், 07.05.2022 அன்று காலை 9.00 மணி அளவில் தான் தனது மனைவி கலாவை பள்ளியில் இறக்கிவிட்டு விட்டு வயலுக்கு சென்று விட்டேன் என்றும், மற்றொரு மனைவி செல்வராணி பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிவதால் அவரும் பணிக்கு சென்று விட்டார் என்றும், தான் மாலை 6.00 மணிக்கு வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டின் முன் பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது என்றும், உள்ளே சென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டிருந்தது என்றும், பீரோவில் வைக்கப் பட்டிருந்த 1,10,000/–ம் மற்றும் இரட்டை வட 7 பவுன் தங்க செயின்–1 டாலர் செயின் 5 பவுன், 6 ஜோடி தோடு 3 பவுன் ஆக மொத்தம் 15 பவுன் நகை காண வில்லை என்றும், பிறகு காவல் நிலையம் வந்து அ.சா.ஆ.1 புகார் கொடுத்தேன் என்றும், 5,6 மாதம் கழித்து உப்புலியபுரம் காவல் நிலையத்தி லிருந்து தனது நகை கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள் என்றும், தான் காவல் நிலையம் சென்று தனது நகைகளை அடையாளம் காட்டினேன் என்றும், அப்போது போலீஸார் எதிரிகளை அடையாளம் காட்டினார்கள் என்றும், நீதிமன்றத்தில் மனு செய்து தனது நகைகளை பெற்று சென்றேன் என்றும், தான் காவல் நிலையத்தில் பார்த்த 4 எதிரிகள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகி யுள்ளார்கள் என்றும், அ.சா.ஆ.2 புகைப்படத்தில் உள்ள நகைகளை தான் பெற்று சென்றேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அ.சா.5 பெரியமணி காவல் உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், தான் கடந்த 07.05.2022 அன்று 22.00 மணிக்கு உப்புலியபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது தமிழரசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று உப்புலியபுரம் காவல் நிலைய குற்ற எண்.115/2022 சட்டப் பிரிவுகள் 454, 380 இதச படி அ.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், பின்னர் வழக்கை கோப்பை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iii) அ.சா.6 திரு.செந்தில்குமார் காவல் ஆய்வாளர் தனது சாட்சியத்தில், கடந்த 07.05.2022 அன்று உப்புலியபுரம் காவல் நிலையத்தில் மங்கப்பட்டி புதுாரை சேர்ந்த தமிழரசன் என்பவர் கொடுத்த புகாரை பெற்று உதவி ஆய்வாளர் பெரியமணி அவர்கள் காவல் நிலைய குற்ற எண் 115/2022 சட்டப்பிரிவுகள் 454, 380 இதச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து தனது பார்வைக்கு வைத்ததை தான் 08.05.2022 அன்று தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.10 மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும், பின்னர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மாவட்ட காவல் நாய்படை பிரிவை சேர்ந்த முதல் நிலை காவலர் 1788 கோபால கிருஷ்ணன் மற்றும் 356 ராஜராஜன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், வழக்கு புலன் விசாரணையில் இருந்து வந்த நிலையில் 11.11.2022 அன்று காலை 7.00 மணி அளவில் கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் துறையூர் – சொரத்தூர் நால்ரோடு சென்று அங்கு சந்தேகம் படுபடியாக நின்றிருந்தவர்களை விசாரிக்க அவர்கள் தனது பெயர் செங்காட்டு பரத் (எ) பரத், சரணீஷ், மூர்த்தி, போண்டா கார்த்திக் (எ) கார்த்திக் என்றும், மேற்படி நபர்கள் இவ்வழக்கில் சம்பந்தப் பட்டிருந்ததாக தெரிந்ததை அடுத்து 7.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து 08.00 மணிக்கு உப்புலியபுரம் காவல் நிலையம் கொண்டு வந்து பின்னர் அங்கு ஆஜராகியிருந்து சாட்சிகள் முன்னிலையில் செங்காட்டு பரத் (எ) பரத், தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும், அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11 என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் காலை 9.30 மணிக்கு 1வது எதிரி எடுத்து ஆஜர் செய்த இரட்டை வடை செயின்–7 பவுன் ஒன்று, தோடு –6 ஜோடி (3 பவுன்), கல்வைத்த டாலர் செயின்–5 பவுன் ஒன்று மொத்தம் 15 பவுன் ஆகியவற்றை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல்

மகஜரில் கைப்பற்றினேன் என்றும், பின்னர் 10.00 மணிக்கு எதிரி சரணீஷ் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி மேற்படி அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.12 என்றும், பின்னர் 11.00 மணிக்கு எதிரி மூர்த்தி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக் கப்பட்ட பகுதி அ.சா.ஆ.13 என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படை யில் மதியம் 12.00 மணிக்கு 3 வது எதிரி எடுத்து ஆஜர் செய்த 3/4 பவுன் எடையுள்ள தங்க ஜிமிக்கி தோடு-2, சுமார் 1/4 எடை கொண்டு தொங்கு தோடு-3, 2 பவுன் எடை கொண்ட மைனர் தங்க செயின்-1 மொத்தம் 4 1/4 பவுன் ஆகியவற்றை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன் என்றும், பின்னர் 12.30 எதிரி போண்டா கார்த்திக் மணிக்கு கொடுத்த அ.சா.ஆ.14 ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன் என்றும், பின்னர் எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன் என்றும், பிறகு சாட்சிகளை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்தேன் என்றும், பிறகு வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை அ.சா.ஆ.15 படிவம் -95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன் என்றும், பிறகு தனது விசாரணை முடித்து எதிரிகள் மீது 454, 380 இதச படி 10.01.2023 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

iv) அ.சா.2 கலா தனது சாட்சியத்தில், அ.சா.1 தனது கணவர் என்றும், 07.05.2022 அன்று காலை 9.00 மணி அளவில் தான் பள்ளிக்கு வேலைக்கு சென்றுவிட்டு மாலை 6.00 மணிக்கு வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டிருந்தது என்றும், உள்ளே சென்று பார்த்தபோது பீரோ உடைக்கப்பட்டிருந்தது என்றும், பீரோவில் வைக்கப்பட்டிருந்த 1,10,000/-ம் மற்றும் இரட்டை வட 7 பவுன் தங்க செயின்-1 கல் வைத்த டாலர் செயின் 5

பவுன், 6 ஜோடி தோடு 3 பவுன் ஆக மொத்தம் 15 பவுன் நகை காணவில்லை என்றும், பிறகு காவல் நிலையம் வந்து தனது கணவர் புகார் கொடுத்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

v) அ.சா.3 நடராஜன் தனது சாட்சியத்தில், எதிரி பரத் கொடுத்த அ.சா.ஆ.2 ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், எதிரி சரனீஷ் கொடுத்த அ.சா.ஆ.3 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், எதிரி மூர்த்தி கொடுத்த அ.சா.ஆ.4 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், எதிரி கார்த்திக் கொடுத்த அ.சா.ஆ.5 ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், 11.11.2022 அன்று  உப்புலியபுரம் போலீஸார் என்னை வரசொல்லி யிருந்தார்கள் என்றும், தானும் பெரியசாமியும் காலை 11.00 மணிக்கு சென்றோம் என்றும், அங்கு போலீஸார் எதிரிகள் நால்வரும் கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தை பதிவு செய்தார்கள் என்றும், எதிரிகள் 2021ம் வருடம் ஆகஸ்ட் மாதம் எரகுடியில் உள்ள போஸ்ட் ஆபிஸை உடைத்து திருட முயற்சி செய்ததாகவும், 07.05.2022 அன்று மங்கப்பட்டி புதுாரில் உள்ள வீட்டின் பூட்டை உடைத்து 15 பவுன் நகையும், 1,10,000/-ம் பணமும் திருடியதாகவும், 26.05.2022 ம் தேதி கோட்டாத்துார் இந்திரா நகரில் உள்ள வீட்டின் பூட்டை உடைத்து 4 1/2 பவுன் நகை திருடியதாகவும், எதிரிகள் வாக்குமூலம் கொடுத்தார் கள் என்றும், அப்போது எதிரி பாரத் இரட்டை வட செயின் 7 பவுன், 6 ஜோடி தோடு 3 பவுன், கல் வைத்த டாலர் 5 பவுன் செயின் ஆக மொத்தம் 15 பவுனை போலீஸாரிடம் கொடுத்தார் என்றும், அதை போலீஸார் கைப்பற்றினார் கள் என்றும்,  எதிரி மூர்த்தி யிடமிருந்து  ஒரு செயின், 2 ஜோடி தோடு மொத்தம் 4 1/2 பவுன் போலீஸாரிடம் கொடுத்தார் என்றும், அதை போலீஸார் கைப்பற்றினார் கள் என்றும், போலீஸார் வழக்கை விசாரித்தபோது நான்கு பேரும் சேர்ந்து பணத்தை

செலவு செய்து விட்டதாக சொன்னார்கள் என்றும், தன்னுடன் பெரியசாமி என்பவர் ஒப்புதல் வாக்கு மூலத்திலும், கைப்பற்றுதல் மகஜரிலும் கையெழுத்து செய்தார் என்றும்,எதிரி மூர்த்தி யிடமிருந்து கைப்பற்றிய நகை களின் கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

vi) அ.சா.4 செந்தில்குமார் தனது சாட்சியத்தில், அ.சா.ஆ.8 பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், தனது நண்பர் தமிழரசன் வீட்டில் 07.05.22 ம் தேதி திருடு போய்விட்டது என்றும், அதை விசாரிப்பதற்காக 08.05.22 ம் தேதி தான் தமிழரசன் வீட்டிற்கு சென்றிருந்தேன் என்றும், அப்போது துறையூர் ஆய்வாளர் தமிழரசன் வீட்டிற்கு வந்து மேப் வரைந்து தன்னிடம் சாட்சியாக கையெழுத்து கேட்டார்கள் என்றும், தன்னுடன் பூபதி என்பவரும் கையெழுத்து செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகளுடன் விசாரணை முடிக்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான சாட்சியங்கள் குறித்து குவிமுச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது, எதிரிகள் அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சிகள் என்று கூறினார். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. இவ்வழக்கில் இனி காணவேண்டிய தீர்வு யாதெனில், அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளா என்பதே ஆகும்.**

8. அரசு தரப்பு வழக்கானது, 07.05.2022 ம் தேதி காலையில் புகார்தாரர் தனது வீட்டை பூட்டி விட்டு வயலுக்கு சென்றதாகவும், அன்று பகல் சுமார் 02.00 மணியளவில் முதலாவது எதிரி மற்ற எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு திருடவேண்டும் என்ற நோக்கத்தில் புகார்தாரரின் வீட்டின் பூட்டை உடைத்து

பதுங்கி வீட்டின் உள்ளே சென்று பெட்ரூமில் இருந்த பீரோவை திறந்து அதில் இருந்த 7 பவுன் இரட்டைவட தங்க செயின், 5 பவுன் நெக்லஸ் மற்றும் 3 பவுன் 6 ஜோடி தங்க தோடுகள் என மொத்தம் சுமார் 15 பவுன் தங்க நகைகளையும், ணம் ரூ.1,10,000/–த்தை திருடிச்சென்ற குற்றமாகும்.

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

10. அரசு தரப்பு கற்றறிந்த உதவி வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில், எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பு சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.6 ன் சாட்சியம் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 சான்றாவணங்களின் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

11. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்குரைஞர் தன்னுடைய வாதத்தில், எதிரிகள் காவல் துறையால் அடையாளப்படுத்தப்பட்டார்கள் என்றும், எதிரிகள் மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்கான நேரடி சாட்சியம் ஏதும் இல்லை என்றும், புள்ளிவிவரக் கணக்கிற்காக எதிரிகள் மீது இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றும், எதிரிகள் மீதுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்ய வில்லை என்றும், எனவே எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

12. 1 முதல் 4 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 454, 380 ன் கீழ் குற்றச்சாட்டு வனையப் பட்டுள்ளது.

13. அ.சா.ஆ.1 புகார், அ.சா.1 தமிழரசன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி புகாரின் அடிப்படையில் அ.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கை 07.05.2022 அன்று எதிரி தெரியவில்லை என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

14. 1 முதல் 4 எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 454 மற்றும் 380 ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து காண்பதற்கு, சிறைதண்டனைக்குரிய ஒரு குற்றம் எதையும் செய்வதன் பொருட்டு, எதிரிகள் பதுங்கி அ.சா.1ன் வீட்டினுள் அத்துமீறி நுழைந்து, அந்த வீட்டில் உள்ள பொருட்களை திருடியிருக்க வேண்டும்.

15. அ.சா.ஆ.1 புகாரில், 07.05.2022 ம் தேதி அ.சா.1 காலை 09.00 மணியளவில் வயலுக்கு வேலைக்கு சென்றுவிட்டதாகவும், அ.சா.1ன் இரண்டு மனைவிகளும் பள்ளிக்கு சென்றுவிட்டார்கள் என்றும், பணி முடித்து மூவரும் மாலை 06.00 மணிக்கு வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் கதவு உடைக்கப்பட்டு, பீரோ லாக்கரில் இருந்த இரட்டைவட செயின் 7 பவுன், தோடு 6 ஜோடி 3 பவுன், டாலர் செயின் கல் வைத்தது 5 பவுன் மொத்தம் 15 பவுன் மற்றும் பணம் ரூ.1,10,000/-ம் காணவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

16. புகார்தாரரான அ.சா.1 தமிழரசன் சம்பவத்தை பற்றியும், சம்பவத்தில் காணாமல் போன நகைகள் பற்றியும், தான் புகார் கொடுத்தது பற்றியும் சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.1 புகார் கொடுத்து 5,6 மாதங்கள் கழித்து நகை கிடைத்துவிட்டதாக உப்புலியபுரம் போலீசார் தகவல் சொல்லி காவல் நிலையம் சென்று தனது நகைகளை அடையாளம் காட்டியதாகவும், நீதிமன்றத்தில் மனு செய்து நகையை பெற்று சென்றதாகவும், காவல் நிலையத்தில் போலீசார் நான்கு எதிரிகளையும் அடையாளம் காட்டியதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1ன் மனைவியான அ.சா.2 கலா, சம்பவத்தில் காணாமல் போன நகைகள் பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

17. அ.சா.4 செந்தில்குமார், அ.சா.ஆ.8 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.10 மாதிரி வரைபடம் தன் முன்னிலையில் தயார் செய்யப்பட்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

18. மேற்கண்ட அ.சா.1,2 மற்றும் அ.சா.4ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், சம்பவத்தில், எதிரிகள் தான் ஈடுபட்டார்கள் என்று குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்பதற்கு மேற்படி நபர்களின் சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. அரசு தரப்பில் எதிரிகள் தான் இவ்வழக்கின் குற்ற செயலில் ஈடுபட்டார்கள் என்று 1 முதல் 4 எதிரிகள் அளித்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில், எதிரிகள் மீது இவ்வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கான 1 முதல் 4 எதிரிகள் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்து, அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரிகள் திருடியதாக சொல்லப்படும் இரட்டைவட செயின் 7 பவுன், தோடு 6 ஜோடி 3 பவுன், கல் வைத்த டாலர் செயின் 5 பவுன், முக்கால் பவுன் எடை கொண்ட ஜிமிக்கி தோடு 2, சுமார் 1/4 பவுன் எடை கொண்ட தொங்கு தோடு 3, சுமார் 2 பவுன் எடைகொண்ட மைனர் செயின் 1ஆகியவை அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகஜர் மூலம் 1வது எதிரி செங்காட்டு பரத் மற்றும் 3 வது எதிரி மூர்த்தி ஆகியோரிடமிருந்து கைப்பற்றி அ.சா.ஆ.15 படிவம் 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாக சொல்லப்படுவது குறித்து தீர்வு செய்வதற்கு அரசு தரப்பில் மேற்படி ஒப்புதல் வாக்கு மூலத்தின் அனுமதிக்கப் பட்டப்பகுதிகள் அ.சா.ஆ.11 முதல் அ.சா.ஆ.14 மற்றும் கைப்பற்றுதல் மகஜர்கள் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப் பட்டுள்ளதா என்பதை தீர்மானிக்க வேண்டியது அவசியமாகிறது.

20. அ.சா.ஆ.11 முதல் அ.சா.ஆ.14 வரையிலான ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகஜர்கள் சாட்சிகள் பெரியசாமி மற்றும் நடராஜன் ஆகியோர் முன்னிலையில் தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.11 ஒப்புதல் வாக்குமூலம் 11.11.2022ம் தேதி

காலை 08.00 மணிக்கு 1வது எதிரி பரத்திடமிருந்து, அ.சா.ஆ.12 ஒப்புதல் வாக்கு மூலம் காலை 08.30 மணிக்கு 2வது எதிரி சரணேஷிடமிருந்து, அ.சா.ஆ.13 ஒப்புதல் வாக்குமூலம் காலை 11.00 மணிக்கு 3வது எதிரி மூர்த்தியிடமிருந்து, அ.சா.ஆ.14 ஒப்புதல் வாக்குமூலம் காலை 12.30 மணிக்கு 4வது எதிரி கார்த்திக் கிடமிருந்தும், உப்புலியபுரம் காவல் நிலையத்தில் சாட்சிகள் முன்னிலையில் பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

21. ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.3 நடராஜன், 11.11.2022 ம் தேதி உப்புலியபுரம் போலீசார் தன்னையும், பெரியசாமியையும் காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி, இருவரும் காலை 11.00 மணிக்கு சென்றதாகவும், அங்கு எதிரிகள் நால்வரும் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் பதிவு செய்ததாகவும், எதிரிகள் மங்கப்பட்டிபுதூரில் உள்ள வீட்டின் பூட்டை உடைத்து 15 பவுன் நகையை திருடியதாக வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், 1வது எதிரி பரத்திடமிருந்து 15 பவுன் நகையை போலீசார் கைப்பற்றினார்கள் என்றும், எதிரி மூர்த்தியிடமிருந்து 4 பவுன் நகையை கைப்பற்றினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

22.அ.சா.3 ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், 1 மற்றும் 2 எதிரிகள் காலை 08.30 மணிவரை ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாக ஆவணங்கள் உள்ள நிலையில், 1வது எதிரியிடமிருந்து காலை 09.30 மணிக்கு அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகஜர் மூலம் நகைகள் கைப்பற்றப்பட்டதாக ஆவணம் உள்ள நிலையில், அ.சா.3 உப்புலியபுரம் காவல் நிலையத்திற்கு காலை 11.00 மணிக்கு சென்றதாக சாட்சியம் அளித்துள்ளதால், அ.சா.ஆ.11 மற்றும் அ.சா.ஆ.12 மேற்படி அ.சா.3 ன் முன்னிலையில் 1 மற்றும் 2 எதிரிகளால் தன்னிச்சையாக கொடுக்கப் பட்டதா என்பதும், 1வது எதிரியிடமிருந்து அ.சா.ஆ.6 ன் மூலம் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டதா என்பது சந்தேகத்தை எழுப்புகிறது. மேலும் அ.சா.ஆ.11 முதல் அ.சா.ஆ.14 ஆவணங்கள் தட்டச்சு செய்யப்பட்டுள்ள நிலையில், அ.சா.3

நடராஜன், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எழுதினார்கள் என்றும், அதில் தான் கையெழுத்து செய்ததாக ஆவணங்களுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் மற்ற எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை மணிக்கு பெறப்பட்டது என்று அ.சா.3 சாட்சியம் அளிக்கவில்லை. எனவே அ.சா.ஆ.11 முதல் அ.சா.ஆ.14 வரையிலான ஒப்புதல் வாக்குமூலங்கள் 1 முதல் 4 எதிரிகளால் தன்னிச்சையாக கொடுக்கப்பட்டு, அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 கைப்பற்றுதல் மகஜர்கள் மூலம் வழக்கு சொத்துக்கள் அ.சா.3 ன் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதா என்பது சந்தேகத்தை எழுப்புகிறது.

23. அ.சா.5 காவல் உதவி ஆய்வாளர் பெரியமணி, அ.சா.1 னிடம் புகாரைப் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு கோப்பை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.6 காவல் ஆய்வாளர் செந்தில்குமார், வழக்கு கோப்பை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, விசாரணை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

24. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில், எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என்று தனிநபர் சாட்சிகள் சாட்சியம் அளிக்காததாலும், எதிரிகள் தன்னிச்சையாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து எதிரிகளிடமிருந்து வழக்கு சொத்துகள் கைப்பற்றப் பட்டதா என்பது சந்தேகத்தை எழுப்புவதாலும், எதிரிகள் அ.சா.1 ன் வீட்டில் பதுங்கி அ.சா.1 ன் வீட்டின் உள்ள பொருட்களை திருடினார்களா என்பது சந்தேகத்தை எழுப்புகிறது.

25. மேற்கண்ட சங்கதிகளை ஒன்றிணைத்து பார்க்கும்போது, எதிரிகள் அ.சா.1 ன் வீட்டில் அத்துமீறி நுழைந்து அவருடைய வீட்டில் உள்ள நகையை திருடி, இதச பிரிவுகள் 454 மற்றும் 380 ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார்கள்

என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

<u>26. முடிவாக –</u>

i) எதிரிகள் மீதான இதச பிரிவுகள் 454, 380–ன் கீழான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகள் இதச பிரிவுகள் 454, 380–ன் கீழ் குற்றவாளிகள் அல்ல என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

ii) இவ்வழக்கில் வழக்கு சொத்தான R.P.No.03/2023 ல் கண்ட 15 பவுன் தங்க நகைகளை அ.சா.1 குற்றப்பல்வகை மனு எண்.78/2023 உத்தரவின் கீழ் இடைக்கால பாதுகாப்பில் பெற்றுச்சென்றதால், மேற்படி நகைகளை இவ் வழக்கின் மேல்முறையீட்டுக்காலத்திற்கு பின்பு அவரே வைத்துக்கொள்ள உத்தர விடப்படுகிறது. எதிரிகளுக்காக எழுதிக்கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரம் இவ்வழக்கின் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பின்பு ரத்து செய்ய உத்தரவிடப் படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப் பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 09 ம் தேதி அன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்.A.நர்மதாராணி
நீதித்துறை நடுவர்
துறையூர்.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :–

| அ.சா | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர்கள் | அரசு தரப்பு சாட்சிகளின் விவரங்கள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் |
|---|---|---|---|---|
| அ.சா.1 | தமிழரசன் | புகார்தாரர் | 14.11.24 | 14.11.24 |

| | | | | |
|---|---|---|---|---|
| அ.சா.2 | கலா | சம்பவ சாட்சி | 14.11.24 | 14.11.24 |
| அ.சா.3 | நடராஜன் | ஒப்புதல் வாக்குமூல சாட்சி | 14.11.24 | 19.11.24 |
| அ.சா.4 | செந்தில்குமார் | பார்வை மகஜர் சாட்சி | 19.11.24 | 19.11.24 |
| அ.சா.5 | பெரியமணி | புலன் விசாரணை அதிகாரி | 19.11.24 | 19.11.24 |
| அ.சா.6 | செந்தில்குமார் | புலன் விசாரணை அதிகாரி | 26.11.24 | 26.11.24 |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :–**

| Description to the Exhibit and its date | Date. when the Exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|
| புகார் | 12.05.22 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து | 12.11.22 | அ.சா.ஆ.2 | அ.சா.3 | அசல் |
| ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து | 12.11.22 | அ.சா.ஆ.3 | அ.சா.3 | அசல் |
| ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து | 12.11.22 | அ.சா.ஆ.4 | அ.சா.3 | அசல் |
| ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து | 12.11.22 | அ.சா.ஆ.5 | அ.சா.3 | அசல் |
| கைப்பற்றுதல் மகஜர் | 12.11.22 | அ.சா.ஆ.6 | அ.சா.3 | அசல் |
| கைப்பற்றுதல் மகஜர் | 12.11.22 | அ.சா.ஆ.7 | அ.சா.3 | அசல் |
| பார்வை மகஜர் | 12.11.22 | அ.சா.ஆ.8 | அ.சா.4 | அசல் |
| முதல் தகவல் அறிக்கை | 12.05.22 | அ.சா.ஆ.9 | அ.சா.5 | அசல் |
| வரைபடம் | 12.11.22 | அ.சா.ஆ.10 | அ.சா.6 | அசல் |
| ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி | 12.11.22 | அ.சா.ஆ.11 | அ.சா.6 | அசல் |
| ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி | 12.11.22 | அ.சா.ஆ.12 | அ.சா.6 | அசல் |
| ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி | 12.11.22 | அ.சா.ஆ.13 | அ.சா.6 | அசல் |
| ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி | 12.11.22 | அ.சா.ஆ.14 | அ.சா.6 | அசல் |

| | | | | |
|---|---|---|---|---|
| படிவம் 95 | 12.11.22 | அ.சா.ஆ.15 | அ.சா.6 | அசல் |

<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்</u> எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.
<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– இல்லை.
<u>நீதிமன்ற சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :– இல்லை

ஒப்பம்.A.நர்மதாராணி
நீதித்துறை நடுவர்
துறையூர்.

<u>**குறிப்பு:–**</u>

1. இவ்வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக
 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
3. முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

/ உண்மை நகல் /

நீதித்துறை நடுவர்
துறையூர்.